**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் திங்கட்கிழமை

**CC – 313/2023**

(CNR No. TNTI15-001624-2023)

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | C.C.No: 313 of 2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண்.<br>(Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஊதியூர் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 147/2023)<br>… புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | வலுப்பூரன் (54/2023)<br>த/பெ. மாகாளி,<br>2/42 கவுண்டம்பாளையம்,<br>குறுக்கப்பாளையம் வட்டம்,<br>நிழலி,<br>திருப்பூர் மாவட்டம்,<br>… எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 28.11.2023 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 29.11.2023 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 29.11.2023 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail) | 08.12.2023 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 05.02.2024 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 26.02.2026 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | (i) எதிரியின் மீதான இதச பிரிவு 294(b), 323 மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>(ii) எதிரி மீது இதச பிரிவு 506(ii) ன் கீழான |



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:17:20 +0530

| | | |
|---|---|---|
| | | குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி என்று குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 26.02.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 2 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

இந்த வழக்கில் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 325, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**<u>1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**

1.1) கடந்த 28.11.2023ம் தேதி பகல் 13.00 மணிக்கு ஊதியூர் கவுண்டம்பாளையம் சாட்சி 1 செல்வி வீட்டின் முன்பு எதிரி வலுப்பூரன் வீதியில் நின்று சாட்சி 1 ஐ வெளியே வாடி கண்டாரோலி என சத்தம் போட்டுள்ளார். அதற்கு வாதி ஏன் பிரச்சனை செய்ரீங்க என கேட்டதற்கு அப்படித்தாண்டி தேவிடியா பேசுவேன் என பொதுஇடத்தில் வைத்து கெட்டவார்த்தையால் பேசி அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார். மேலும் சாட்சி 1 செல்வியை எதிரி வலுப்பூரன் பொது வீதியில் வைத்து கையால் அடித்துள்ளார். மேலும் எதிரி வலுப்பூரன் வீட்டிற்கு சென்று அருவாளை எடுத்து வந்து சாட்சி 1 செல்வியை



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:17:27 +0530

பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ள குற்றத்திற்காக எதிரி மீது 294 (b), 323, 506 (2) IPC மற்றும் 4 of TNPHW Act ன் படி குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. நகல் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல்:</u>**

2.1) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 29.01.2024 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து 05.02.2024 அன்று கு.வி.மு.ச. பிரிவு 240–ன் படி எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து வாசித்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

2.2) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>3. அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u>**

3.1. இவ்வழக்கின் புகார்தாரர் செல்வி அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 2023 ம் வருடம் கவுண்டம்பாளையத்தில் உள்ள எங்களது வீட்டில் நான் மதிய வேலையில் இருந்தபோது எனது கணவர் என் மீது சந்தேகம் கொண்டு நீ அவன் கூட போனீயா, இவன் கூட படுத்துக்கிட்டு இருந்தியா என்று கேட்டு பேசினார். மேலும் எனது மருமகன் உடன் சம்மந்தப்படுத்தி தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும் எதற்கு இப்படி பேசுகிறீர் என்று கேட்டதற்கு இப்படித்தான்டி பேசுவேன் என்று சொல்லி என்னை கையால் அடித்தாகவும் இதனால் நான் வீட்டிற்குள்


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:17:32 +0530

சென்று கதவை சாத்திக்கொண்டேன் பின்னர் எனது கணவர் வீதியில் நின்று கையில் அரிவாளை வைத்துக்கொண்டு வெளியே வாடி உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டினார். உடனே நான் எனது இரண்டு மருமகன்களுக்கும், மகள்களுக்கும் தகவல் சொன்னேன் எனது சின்ன மருமகன் திவாகர் 2 மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார் அதன்பிறகு பெரிய மருமகன் வேலுச்சாமியும் சம்பவ இடம் வந்துவிட்டார். அவர்கள் வந்தவுடன் எனது கணவர் அங்கிருந்து சென்றுவிட்டார் பின்னர் எனது கணவர் மீது ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

3.3). இவ்வழக்கில் கேள்விநிலை சாட்சியான அ.சா.2 மகேஷ்வரி தனது சாட்சியத்தில் கடந்த 28.11.2023 ஆம் தேதியன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அம்மாவை பார்த்து கண்டாரோழி, தேவடியா போன்ற இன்னும் சொல்லமுடியாத அளவுக்கு தகாத வார்த்தைகளால் பேசி எனது அம்மாவை அடித்ததாகவும், மேலும் அரிவாளை எடுத்துக்கொண்டு கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வெட்ட வந்ததாகவும், எனது அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் தகவல் தெரிந்து நானும், எனது கணவரும் மாலை சுமார் 4.00 மணியளவில் வீட்டிற்கு வந்தோம். பின்னர் அம்மாவிடம் என்ன என்று கேட்டபோது அம்மாவை மேற்சொன்னவாறு தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அரிவாளை எடுத்துக்கொண்டு வந்து வெட்ட முயற்சி செய்ததாகவும் சொன்னார். அதனால் நாங்கள் பயந்துகொண்டு அவர் மீது ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

3.5) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான திவாகர் அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 29.11.2023ம் தேதியன்று காலை 8.30 மணியளவில் எனது மாமனார் அரிவாளை எடுத்துக்கொண்டு எனது மாமியாரை வெட்டுவது சம்பந்தமான அடிதடி வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார்



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:17:36 +0530

செய்தனர். அப்போது என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் மனோகர் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

3.7) வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள ஊதியூர் காவல் நிலையத்தின் முதல் நிலை காவலர் திரு. குமார் (அ.சா.4) அவரது சாட்சியத்தில் கடந்த 29.11.2023 ஆம் தேதி காங்கேயம் காவல் நிலைய பணியில் இருந்த போது செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலைய குற்ற எண்.147/2023 சட்டப்பிரிவு 294(b), 323, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டி அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

3.8) மேலும் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ள ஊதியூர் காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளர் திரு.ராஜா(அ.சா.5) அவர்கள் தனது சாட்சியத்தில் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டியன் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 29.11.2023 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திவாகர் மற்றும் மனோகரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு இவ்வழக்கின் சுமார் 45 செமீ நீளமுள்ள மரக்கைப்புடியுடன் கூடிய இரும்பு அரிவாள் ஒன்று கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் செல்வி, வேலுச்சாமி, மகேஷ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கினை உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் அவர்கள் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழகின் சட்டப்பிரிவினை 294(b), 323, 506(2) இதச வில் இருந்து 294(b), 323, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:17:41 +0530

மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**4. கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பில் அசா1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளுடன் அரசு தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 26.02.2026 அன்று வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியுள்ளார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act ன் படி குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***

**6. தீர்வு:**

6.1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் வாதி செல்வி என்பவரை எதிரி வலுப்பூரன் என்பவர் தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் அடித்து காயப்படுத்தி, அரிவாளை கொண்டு கொலை மிரட்டலும் விடுத்து பொது இடத்தில் அவமானப்படுத்திய சம்பவமே இவ்வழக்கு சாரம் என்று இவ்வழக்கின் புகாரில் கூறப்பட்டுள்ளது.

6.2) இந்நிலையில் அரசுத் தரப்பில் புகார்தாரர் செல்வி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 2023 ம் வருடம் கவுண்டம்பாளையத்தில் உள்ள எங்களது வீட்டில் நான் மதிய வேலையில் இருந்தபோது எனது கணவர் என் மீது சந்தேகம் கொண்டு நீ அவன் கூட



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:17:45 +0530

போனீயா, இவன் கூட படுத்துக்கிட்டு இருந்தியா என்று கேட்டு பேசினார். மேலும் எனது மருமகன் உடன் சம்மந்தப்படுத்தி தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும் எதற்கு இப்படி பேசுகிறீர் என்று கேட்டதற்கு இப்படித்தான்டி பேசுவேன் என்று சொல்லி என்னை கையால் அடித்தாகவும் இதனால் நான் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டேன் பினனர் எனது கணவர் வீதியில் நின்று கையில் அரிவாளை வைத்துக்கொண்டு வெளியே வாடி உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டினார். உடனே நான் எனது இரண்டு மருமகன்களுக்கும், மகள்களுக்கும் தகவல் சொன்னேன் எனது சின்ன மருமகன் திவாகர் 2 மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார் அதன்பிறகு பெரிய மருமகன் வேலுச்சாமியின் சம்பவ இடம் வந்துவிட்டார். அவர்கள் வந்தவுடன் எனது கணவர் அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும் பின்னர் எனது கணவர் மீது ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 செல்வி எதிரிக்கும் தனக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனைகளை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக அ.சா.1ன் புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1) மற்றும் அவரது சாட்சியத்தின் வாயிலாக தெளிவாகிறது. மேலும் அ.சா.1 செல்வியின் சாட்சியத்தை நேரடி மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சியமாகவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

6.4) இந்நிலையில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட மகேஷ்வரி அ.சா.2 கேள்விநிலை சாட்சியாவர். அவர் தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 28.11.2023 ஆம் தேதியன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அம்மாவை பார்த்து கண்டாரோழி, தேவடியா போன்ற இன்னும் சொல்லமுடியாத அளவுக்கு தகாத வார்த்தைகளால் பேசியதா சொல்லி எனது அம்மாவை அடித்ததாகவும், மேலும் அரிவாளை எடுத்துக்கொண்டு கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வெட்ட வந்ததாகவும், எனது அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*சம்பவத்தை நான்*



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:17:51 +0530

*நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அம்மா சொல்லித்தான் என்ன நடந்தது என்று தெரியும் என்றால் சரிதான்*" என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.2 ன் சாட்சியம் கேள்விநிலை சாட்சியமாக அமைந்துள்ளதால் அசா.2 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு உதவும் வகையில் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

6.5) மேலும் பார்வை மகஜர் சாட்சியான அசா.3 திவாகர் அ.சா.1 ன் மருமகன் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் அடிதடி வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தனர். அப்போது என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் மனோகர் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார். இதன் மூலம் அசா.3 தனி நபர் சாட்சியல்ல என்பது தெரியவருகிறது.

6.5) மேலும், பிரிவு 294(b) இதச வின் படி மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்படும் வகையில் பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாச பாடல்கள் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவர் ஒருவரும் தண்டணைக்குரியவர் ஆவார். இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 செல்வி தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி தன்னை "வெளியே வாடி கண்டாரோலி என தகாத வார்த்தையால் வீதியிலிருந்து சத்தம் போட்டார்," என்று கூறிய நிலையில் தனது நீதிமன்ற விசாரணையில் எதிரியான தனது கணவர் தன் மீது சந்தேகம் கொண்டு அவன் கூட போனியா, இவன் கூட படுத்துக்கிட்டு இருந்தியா என்று பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் மேற்படி பேசப்பட்ட சொற்கள் பொது இடத்தில் பேசப்பட்டதா அதன் மூலம் எவரேனும் ஒருவருக்கு தொந்தரவு ஏற்பட்டதா என்று காணும் போது அ.சா.1 செல்வியை தனது குறுக்கு விசாரணையில் அவரது வீட்டின் அருகிலே எதிரி தகாத வார்த்தை பேசியதாகவும், அந்த சமயத்தில் அக்கம் பக்கம் உள்ள நபர்கள் யாரும் வரவில்லையென்றும் கூறியுள்ளார். மேலும் அவை பேசப்பட்ட இடம் தொடர்பாக காணும் போது அ.சா.1 ன் வீட்டின் முன்பு என்று தெரிய வருகிறது. மேற்படி ஆபாசமான சொற்கள் பொது இடத்தில் பேசப்பட்டது இல்லை என்றும் அதன்மூலம்



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:17:55 +0530

யாருக்கும் தொந்தரவு ஏற்படவில்லை என்பது அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் இதச பிரிவு 294(b) ன் கீழான உட்கூறுகள் எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.8) மேலும் இவ்வழக்கில் இதச பிரிவு 323 ன் படி பிறருக்கு தன்னிச்சையாக காயங்கள் ஏற்படுத்தி தீங்கு விளைவிக்கின்ற எவர் ஒருவரும் தண்டனைக்குரியவராவார். இவ்வழக்கில் அ.சா.1 செல்வி தனது சாட்சியத்தில் எதிரி தன்னை கையால் அடித்தாக கூறியுள்ள நிலையில் காயத்தின் தன்மை குறித்து குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் அதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மருத்துவர் காயச்சான்று ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே எதிரி அ.சா.1 ஐ தாக்கினாரா என்பது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதால் எதிரி மீது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.9) மேலும், இதச 506(ii) பிரிவின் படி எந்ததொரு நபரையும் பீதி அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த நபரின் உடலுக்கோ, சொத்துக்கோ, மரியாதைக்கோ அல்லது அந்த நபர் மீது அக்கறை கொண்டுள்ள வேறு எந்தவொரு நபரின் உடலுக்கோ அல்லது மரியாதைக்கோ தீங்கு விளைவிக்க போவதாக மிரட்டிக்கின்ற எந்தவொரு நபரும் அல்லது அத்தகைய அச்சுறுத்தலை நிறைவேற்றுவதை தவிர்ப்பதற்காக வழி முறையாக சட்டப்பூர்வமாக செய்ய கட்டுப்படாத எந்தவொரு செயலையும் அந்த நபர் செய்யவோ அல்லது அந்த நபர் செய்ய உரிமை உள்ள எந்தவொரு செயலை செய்யாமல் இருக்கவோ மற்றொருவரை அச்சுறுத்துபவர் எவரும் தண்டனைக்குரியவர் ஆவார். இவ்வழக்கில் எதிரி அ.சா.1க்கு குற்றமுறு அச்சுறுத்தும் வகையில் மிரட்டல் விடுத்துள்ளாரா என்று பரிசீலனை செய்கையில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி வீட்டிற்குள் சென்று



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:18:01 +0530

அருவாளை எடுத்து வந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறியதாக கூறியுள்ளார். மேலும் அது குறித்து தனது நீதிமன்ற சாட்சியத்திலும் அரிவாளை வைத்துக் கொண்டு வெளியே வாடி உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். இதன் மூலம் எதிரியால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது என்பது அரசு தரப்பில் அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.10) இவ்வழக்கில் எந்தவொரு பொது இடத்திலும் பெண்களைத் துன்புறுத்துபவர் 4 of TNPHW Act ன் கீழ் தண்டிக்கப்படதக்கவர் ஆவார். அதனடிப்படையில் இவ்வழக்கில் (அசா.1) செல்வி என்பவர் எதிரியால் தான் துன்புறுத்தப்பட்டது குறித்து அ.சா.1 குறிப்பிட்டு எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டு என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.11) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 506(ii) ஆகிய குற்றச்சாட்டு மட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அ.சா.1 செல்வி புகார்தாராகவும் பாதிக்கப்பட்ட நேரடி சாட்சியாக உள்ளார். இவ்வாறு இருக்கையில் அ.சா.1 செல்வியின் சாட்சி இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மேலும் இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் இதச 294(b), 323 மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றமானது எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இறுதியாக</u>**

(i) எதிரியின் மீதான இதச பிரிவு 294(b), 323 மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:18:06 +0530

(ii) எதிரி மீது இதச பிரிவு 506(ii) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி என்று குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

(iii) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள P.R.No.153/2023 ல் கண்ட வழக்கு சொத்தான (அ.சா.பொ.1) சுமார் 45 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று(மரக்கைப் பிடியுடன் கூடியது) பயனற்றது என்பதால் அவற்றை இவ்வழக்கு மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

<u>**தண்டனை குறித்த விவரம்**</u>

*எதிரிக்கு வழங்கப்படவுள்ள தண்டனை குறித்து கேட்டபோது எதிரி தரப்பில் இந்த வழக்கு சம்பவத்தில் குற்றச் செயலில் ஈடுபடவில்லை எனவும் எதிரி கூலி வேலை செய்து அவர்கள் குடும்பத்தை நடத்தி வருவதாக கூறி எதிரிக்கு தண்டனை வழங்கமால் மன்னித்து விடுமாறு கூறினார்கள்.*

*எதிரி தரப்பு கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிரி வழக்கு விசாரணைக்காக தொடர்ந்து ஆஜராகி வருதாலும் இதற்கு முன் வழக்கு, முன் தண்டனையும் இல்லை என்பதாலும் எதிரிகள் வயது, குணாதிசயம், மற்றும் அவரின் வாழ்க்கை சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இந்த வழக்கு சம்பவத்தில் எதிரி திட்டமிட்டு ஈடுபட்டதாக தெரியவில்லை.*

*எனவே மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியை மன்னித்து, எச்சரித்து, (Admonition) நன்னடத்தை சட்டத்தின் கீழ் விடுவித்து உத்தரவிடப்படுகிறது.*

*இவ்வழக்கில் கண்காணிப்பு அதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டது. இதன் மூலம் எதிரிக்கு முன் தண்டனை முன் வழக்குகள் எதுவும் இல்லை எனவும் தெரிய வருகிறது. இதனால் எதிரிக்கு நன்னடத்தை சட்டப்பிரிவு 3 ன் கீழ் பலன்கள் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.*



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:18:14 +0530

*மேலும், எதிரி திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளித்து சமுதாயத்தில் வைத்தே திருந்துவதற்கு ஏதுவாக அவர் குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4(1) ல் விடுதலை செய்தும், பொதுமக்கள் மற்றும் குற்றவாளியின் நலன் கருதி குற்றவாளி நன்னடத்தை சட்டப்பிரிவு 1958 பிரிவு 4(3) ன் படி எதிரிகள் ரூ.10,000/– பத்திரம் எழுதிக்கொடுப்பதன் பேரில் நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் 1 வருட காலம் வைக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. கு.வி.மு.ச.பிரிவு 428ன் கீழான சலுகைகள் எதுவும் இல்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டது.

D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.23 21:18:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**<u>இணைப்பு:</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| **வரிசை எண்** | **சாட்சிகளின் பெயர்கள்** | **தேதி** |
|---|---|---|
| அ.சா.1 | செல்வி | 06.02.2026 |
| அ.சா.2 | மகேஷ்வரி | 17.02.2026 |
| அ.சா.3 | திவாகர் | 17.02.2026 |
| அ.சா.4 | குமார் | 20.02.2026 |
| அ.சா.5 | ராஜா | 20.02.2026 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

அ.சா.ஆ.1 – புகார்

அ.சா.ஆ.2 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.3 – கைப்பற்றுதல் மகஜர் மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 – படிவம் 91

அ.சா.ஆ.7 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**

அ.சா.பொ.1 – சுமார் 45 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று(மரக்கைப் பிடியுடன் கூடியது)

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:–**

இல்லை.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.23 21:18:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.